உ

சைவ பரிபாலன சபை வெளியீடு

ஆரம்பம்: விரோதி ஸு ஆவணி மீ 26ஆம் உ (1889)

பிரதி விலை : ரூபா 50.00

# இந்து சாதனம்
# (HINDU ORGAN)

புத்தகம் : 128

ஹேவிளம்பி வருடம் ஆவணித் திங்கள் 1ஆம் நாள்
17-08-2017

இதழ் : 01

## குருவருள் பெற்று திருவருள் பெறுவோம்

**– ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்**
**குரு மஹாசந்நிதானம், நல்லையாதீனம்.**

உலகம் உய்ய வழி செய்பவன் ஆச்சாரியன். ஊனக் கண்ணைத் திறக்க கல்விக்கூட ஆசான்களும் ஞானக் கண் விழிப்புறுவதற்கு ஞானசம்பந்தராதிய சமயாச்சார யர்களும் ஞானிகளும் உதவுகின்றனர். இதனால் ஞான விழிப்பை அருளி மலநீக்கம் செய்யும் குரு மார்களை பரமாச்சாரியர் என்பர்.

இத்தகு பரமாச்சாரியர்களுக் கெல்லாம் பரமாச்சாரிய ராக மிளிர்பவர் பரமேஸ் பவரரான சிவபெரு மான். அவர் தக்ஷணா மூர்த்தியாக ஆசிரி யக்கோலம் கொண் டருளும் பாங்கும் அழகும் தனிச் சிறப் புடையது.

சாதாரணமாக ஆசிரியனுக்கு ஐயம் திரிபற நல்ல கல்வி இருக்க வேண்டும். அழுத்தமாகப் பேச வல்லவாக்கு வன்மை இருக்க வேண்டும். அவனது பேச்சின் வெளிப்பாடு மாணவர் மனதில் நன்கு பதிய வேண்டும்.



ஆயினும் இத்தகு இயல்பு நிலைக்கு சற்றே வித்தியாசமாகச் சொல்லாமல் சொல்லும் பெருவடிவாய்மிளிர் வது ஆச்சார்ய வடிவமாக தக்ஷணாமூர்த்தி திருவுரு வம். தக்ஷண என்ற வட சொல்ஞானம். தென் திசை என்ற பல் வகைப்பொருள் களை உடையது.

ஆகவே, தென் திசை நோக்கித் தென்முகக் கடவு ளாக இருப்பதா லும் ஞானவடிவம் கொண்டு மிளிர் வதாலும் தக்ஷ ணாமூர்த்தி என் றும் ஆல மரத்தடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் காட்சி தருவதால் ஆலமர் செல்வர் என் றும் இக்கடவுள் பேசப்படுகிறார்.



சாந்தமே பொலியும் திருமுகமும் யோக நிலையில் திகழும் திருக் கண் களும் கொண்ட இம்மூர்த்தியை சைவா தீனங்களில் பல்வேறு சந்நிதான சுவாமி களும் தம் உபாசனா மூர்த்தியாகப் போற்றி சிவஞானச் செல்வர்களாகத் திகழ்ந்து வந்துள்ளனர். சைவ சமய சிவாச் சார்யர்களும் ஆதிசங்கரர். அப்பைய தீட்சிதர் போன்றோரும் ஆலமர் செல்வர் வழிபாட்டில் பெரிதும் ஈடுபாடு கொண்ட வர்களாக இருந்துள்ளனர்.

அறியாமை என்ற அபஸ்மார புருஷன் மீது கால் வைத்து அறிவூட்டும் ஞான நூல் ஏந்திய கையினராக தத்துவங் களை உணர்த்தும் ஜபமாலையை இன் னொரு கரத்தில் ஏந்திக் காட்சி தருகிறார் இந்த அழகிய மூர்த்தி.

இம்மூர்த்தியின் வலது கை காட் டும் வியாக்கியான முத்திரையானது சைவசித்தாந்த அடிப்படையை உணர்த்து கிறது. பதியை உணர்த்தும் கட்டை விர லுடன் பசுவை உணர்த்தும் ஆட்காட்டி விரலை இணைத்து ஏனைய விரல் களான மூன்று மலங்களை உணர்த்தும் மூவிரல்களை யும் பிரித்துக் காட்டுகிறது இந்த முத்திரை.

இம்மூர்த்திக்கு வியாக்கியான மூர்த்தி, ஞான மூர்த்தி, யோகமூர்த்தி, வீணாதாரமூர்த்தி என்று நான்கு நிலைகள் சிறப்பாகப் பேசுவர். ஆயினும், இதில் வியாக் கியான தட்சணாமூர்த்தியையே பெரிதும் கோயில்களில் காணலாம்.

கொள்கையில் உறுதி பெற்றவர் நிலை போல வளைவு, நெளிவற்ற சீரிய உடலுடன் காட்சி தரும் இப் பெருமான் ஜபமாலை, புத்தகம், அக்னி, ஞான முத்திரை என்பவற்றைக் கொண்ட நாற்கரங்களோடு திகழ்கிறார். அவர் முன்றிலில் ஞானபோதனை பெற முனிவர்கள் நால்வர் அமர்ந்திருப்பர்.

ஆகவே, ஓர் ஆன்மாவது இயற்கையாகத் தன்னைப் பற்றி நிற்கின்ற ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றினின்றும் முயற்சியோடு பிரித்துக் கொண்டு பதியாகிய சிவபெருமானைச் சேர்ந்திருப்பதே சச்சிதானந்தம் என்று இந்த பரமேஸ்வரரின் பரமாச்சாரிய வடிவம் காட்டுகிறது.

இந்த ஆழமான சித்தாந்தத் திருவடிவத்தை வெறும் குருதோஷ நிவர்த்திக்காக வியாழக்கிழமை வழிபாட்டுக் குரியதாக மாற்றிவிடாமல் சிவஞானம் சிவபக்தியும் பெருகுதற் பொருட்டு வழிபாடு செய்தல் அவசியமாகும்.

**கேள்வி-** **நீங்கள் தர்மசாஸ்தா குருகுலத்தை பல்லாண்டுகளாக நடாத்தி வருகிறீர்கள். எவ்வளவு மாணவர்கள் இந்த குருகுலத்தில் கல்வி கற்றிருப்பார்கள்?**

**பதில்-** எங்களுடைய குலதெய்வம் கேரளாவின் சாட்டுப்பத்தூர்பதியில் எழுந்தருளியிருக்கும் தர்மசாஸ்தா ஆகும். எங்களுடைய தாத்தா அந்தக்காலத்திலேயே சபரிமலை யாத்திரை செய்தவர். இந்த வகையிலேயே எமது குருகுலத்திற்கு தர்மசாஸ்தா குருகுலம் என்று பெயர் வைத்திருக்கிறோம்.

இந்த குருகுலத்தை நாற்பதாண்டுகளாக நடாத்தி வருகின்றோம். சுமார் எழுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கே கல்வி கற்றிருக்கிறார்கள்.

**கேள்வி-** **எழுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றதாகச் சொல்கிறீர்கள். இவர்களிடம் இருந்து பெறும் பணம் மூலம் குருகுலத்தை வளர்க்க முடிந்ததா?**

**பதில்-** நாம் எம்மிடம் கல்விக்காக வருகிற எந்த மாணவர்களிடத்தும் எவ்வகையிலும் பணம் பெறுவதே இல்லை. அதற்கு மேலதிகமாக, இலவசமாக உணவு, உடை, உறையுள் என்பவற்றையும் கொடுத்தே கல்வி கற்பித்து வந்திருக்கிறோம்.

*- பதில் அளித்தவர் பிரம்மஸ்ரீ. தா.மஹாதேவக்குருக்கள்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் கண்ட கனவை நனவாக்குமா? சைவஆன்மீகப் பிரசாரகர் பயிற்சி

**செந்தமிழ்ச்சொல்லருவி ச. லலீசன்.**
**பிரதிமுதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.**

கோவில் பிரசங்கக் கலை இன்று பல சவால்களைச் சந்தித்து வருகின்றது. புராணபடனத்திற்கு இருந்த செல்வாக்கைத் தனக்குடைமையாக்கி குறுகிய நேரத்துள் நிறைவான அறிவை வழங்கும் துறையாக பிரசங்கக் கலை விளங்கியது.

இலங்கையில் சைவப் பிரசங்கக் கலையின் தந்தையாக நல்லை நகர் ஆறுமுகநாவலரையே கொள்ள முடியும். அவருக்கு முன்னர் தமிழில் பிரசங்கக்கலை இருந்த மைக்கான இலக்கியச் சான்றுகள் இருக்கின்றன எனினும் வலுவாக அவற்றை முன்னிலைப்படுத்த இயலாமல் உள்ளது.

மூல நட்சத்திர நாளில் திருஞானசம்பந்தர் குருபூசையின் போது வண்ணை சைவப்பிரகாச வித்தியா சாலையில் இடம் பெற்றது. இதன்போது அவர் வந்திருந்த சனங்களை விளித்து " நான் கைமாறு பெறுதலைச் சிறுதுமெண்ணாது, நம் சமயத்தவர்களோடும் புறச்சமயத்தவர்களோடும் பெரும் பகையெடுத்து முப்பத்திரெண்டு வருஷ காலமாக உங்களுக்குச் சைவசமயத்து உண்மைகளைப் போதித்து வந்தேன். எனக்குப் பின் சைவசமயம் குன்றிப்போமென்று பாதிரிமார் சொல்லுகின்றார்கள். ஆதலால் நான் உயிரோடு இருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப்பிரசாரகரைத் தேடிக்கொள்ளுங்கள்.



நாவலருடைய முதற்பிரசங்கம் வண்ணைச் சிவன் கோவிலில் 1848 ஆம் ஆண்டு பிறப்பதற்கு முதல்நாள் இரவு இடம்பெற்றது. கிறிஸ்தவர்களது பிரசங்கக்கலையின் செல்வாக்கே நாவலருடைய சைவப் பிரசங்கக் கலையின் எழுச்சிக்கு உரம் எனக் கொள்ளல் தப்பாகாது.

நாவலருடைய பிரசங்கம் பெண்கல்விக்குரிய அடித்தளமாகவும் அமைந்திருந்தது. தவிரவும் இன்று நாம் குறிப்பிடும் விழுமியப் பண்புகளுடைய அன்றைய எழுச்சிக்கும் நாவலர் வழிவகுத்தார். குறிப்பாக மதமாற்றத்தைத் தடுக்கும் ஆயுதமாகவும் சமயப் பெருமைகளைப் போதிக்கும் ஊடகமாகவும் பிரசங்கத்தை நாவலர் கையாண்டார்.

தனது பிரசங்கத்தின் வெற்றி குறித்து நாவலர் எத்துணை மதிப்பீட்டைக் கொண்டிருந்தார் என்பது கேள்விக்குரியதாகும். நாவலருடைய இறுதிப் பிரசங்கம் அவர் இறப்பதற்கு (1879) மூன்று மாதங்களுக்கு முன்னர் வைகாசி

இன்னும் என்னைப்போலப் படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய வைவைக் கேட்டுக் கேட்டுக் கைம்மாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப்போலே ஒருவரும் வரார்" என்று குறிப்பிட்டார். இந்தத் தகவலை வே. கனகரத்தினம் உபாத்தியாயர் தனது ஆறுமுகநாவலர் சரித்திரம் நூலில் (1882) குறிப்பிட்டுள்ளார்.

நாவலர் குறிப்பிட்டவாறு சைவப்பிரசங்கக் கலையை முன்னெடுப்பதற்கு அவ்வப்போது சிலரைக் காலம் எமக்குப் பரிசாக நல்கியுள்ளது. ஆயினும் பிரசங்கக் கலைக்கென ஒரு பயிற்சி நெறியை நடத்தும் கனவு 2016 இலேயே செயலுருப் பெற்றது. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் யாழ்ப்பாணத்தில் உள்ள முன்னணி சைவ ஆன்மீகப் பிரசாரகர்கள் மற்றும் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர்களின் பங்களிப்புடன் முதலாவது அணியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமாகப் பயிற்றுவித்துள்ளது. இரண்டாவது அணிக்குரிய பயிற்சியை மட்டக்களப்பில் ஆரம்பித்துள்ளது. மூன்றாவது அணி மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆன்மீக நாட்டங்கொண்ட இளையோர் இப்பயிற்சியில் ஆர்வத்துடன் பங்கேற்பதே இப்பயிற்சிக்குள்ள தனித்துவம் எனலாம். முதலாவது அணியில் நாற்பது பேர் வரையில் இணைந்து இருபத்து ஐவர் பரீட்சைகளுக்கு முகம் கொடுத்து அதில் இருபத்து மூவர் சித்தியெய்தினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

120 மணித்தியாலங்களைக் கொண்ட இக்கற்கை நெறி ஏறத்தாழ ஆறு மாதங்களுக்கு முன்னெடுக்கப்படுகின்றது. இந்து சமயவரலாறு - 30 மணித்தியாலங்கள், இந்துசமயக் கலைகள் - 20 மணித்தியாலங்கள் , இந்துசமயத் தத்துவம் - 20 மணித்தியாலங்கள், இந்துசமயமும் மனிதமேம்பாடும்- 20 மணித்தியாலங்கள், பிரசங்கமுறையியல் - 30 மணித்தியாலங்கள் எனப் பாடங்கள் போதிக்கப்படுகின்றன.

கற்கை நெறியின் நிறைவில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் எழுத்துப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை, தனியாள் செயற்றிட்டம் ஒன்றை நிறை வேற்றல் ஆகிய பரீட்சைகள் மேற்கொள்ளப்பட்டு மூன்றிலும் சித்தியெய்தியவர்களுக்கு பயிற்சிச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது

இப்பயிற்சிச் சான்றிதழ் பெற்றவர்கள் அறநெறிப் பாடசாலைகளிலும் வேறு இடங்களிலும் நடைபெறும் ஆன்மீக நிகழ்வுகளில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஒன்றுடன் தமது பிரசங்கப்பணிகளை முன்னெடுக்கின்றனர். அதைவிட இன்று எமது சமயத்தவர்களுக்குத் தேவையான சமயம்சார்ந்த ஆற்றுப்படுத்தல்களையும் சரீரத் தொண்டுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

வயதில் இளையவர்களாக உள்ள இவர்களே நாளைய சைவ உலகின் திசைகாட்டிகளாக விளங்கப் போகின்றவர்கள் ஆவர். அவர்களுக்கு நாம் வழங்கும் ஆதரவும் அங்கீகாரமுமே அவர்களை இந்தப் பணியில் ஈடுபாட்டுடன் பயணிக்க வைக்கும் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

ஆன்மீகப் பிரசங்கம் என்பது இன்று வருவாய்க்குரிய தொழில்துறையாகப் சிலரால் கைக்கொள்ளப்படுகின்ற நிலைமையும் உள்ளது. தொழில்சார் ஆன்மீக மற்றும் இலக்கியப் பேச்சாளர்கள் நம் நாட்டிலும் தமிழகத்திலும் உள்ளனர். ஆனால் வேதனைக்குரிய விடயம் என்னவெனில் கேட்பதற்குரிய ஆட்கள் இல்லாத சூழலில் ஆன்மீகப் பேச்சை நிகழ்த்தி அதனையும் கிரியை முறைகளில் ஒன்று போலக் கருதி பணம் செய்ய முயலும் செயற்பாட்டை சிலர் முன்னெடுக்கின்றமை வேதனைக்குரியதென்பதையும் இங்கு பதிவுசெய்ய வேண்டும்.

இன்று இலங்கையில் உள்ள 14 ஆயிரம் கிராம அலுவலர் பிரிவுகளில் ஐந்தாயிரம் பிரிவுகளில் இந்துக்கள் உள்ளனர். வன்னி மற்றும் தென்பகுதிகளில் ஆன்மீகப் பிரசாரகர்களுக்குரிய தேவை அதிகமாகவுள்ளது.

உணர்வு ரீதியாக ஆன்மீகத் தொண்டுகளை வலியுறுத்துவதற்கும் அவற்றிற்கு முன்மாதிரியாகத் தாம் விளங்குவதற்கும் ஆன்மீகப் பிரசாரகர்கள் தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும். என்றும் மாணவராகத் தம்மைக் கருதித் தேடலில் ஈடுபட்டுக்கொண்டிருக்க வேண்டும். பிரசங்கிகளின் வாழ்வியல்சார் நடத்தைகளின் வெற்றியே ஆன்மீகப் பிரசங்கவியலின் வெற்றியாக அமையும்.

எதிர்வரும் 22 ஆம் திகதியன்று நல்லூரில் இப்பயிற்சி நெறி பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் விமரிசையாக நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்க தாகும்.

## ஆவணி மாதத்தில் .......

| | | |
|---|---|---|
| 18.08.2017 | வெள் | ஏகாதசி |
| 19.08.2017 | சனி | சனி மஹாபிரதோஷம் |
| 20.08.2017 | ஞாயி | நல்லூர் தேர் |
| 24.08.2017 | வியா | மறைஞானசம்பந்தர் குரு பூசை |
| 25.08.2017 | வெள் | விநாயக சதுர்த்தி |
| 31.08.2017 | வியா | ஆவணி மூலம் |
| 04.09.2017 | திங் | நடேசரபிஷேகம் ஆவணி ஓணம் |
| 05.09.2017 | செவ் | பௌர்ணமி |
| 06.09.2017 | புத | மஹாளய பக்ஷஆரம்பம். |
| 11.09.2017 | திங் | கார்த்திகை |
| 12.09.2017 | செவ் | ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி |
| 16.09.2017 | சனி | நீலகண்ட சிவாச்சார்யார் குருபூசை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவோகம் பாவனை என்பது என்ன?

- நீர்வை. தி. மயூரகிரி -

தீட்சை பெற்று அனுஷ்டானம் சிவபூஜை செய்பவர்களும் சிவாச்சார்யர்களும் தமக்குத் தாமே கரநியாசம், அங்க நியாசம் போன்றவற்றைச் செய்து கொண்டு சந்தனத்தினாலே திலகமிட்டு, சிரசில் ஒரு பூவை சூடிக்கொண்டு மௌனித்து, சில நிமிட நேரம் தியானித்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

ஆயினும், அது என்ன?

தியானமா? யோகமா?

தியானமாகில், தியானம் பயில்பவர்கள் அவ்வாறு, சந்தனத்தால் திலகமிடுவதும் சிரசில் பூச்சூடிக் கொண்டு தியானிப்பதும் இல்லையே?

அவ்வாறாயின் இது என்ன?

இதை சிவோகம் பாவனை என்கிறார்கள்.

ஆக, சிவம் நான் என்று பாவித்தல் என்கிறார்கள். அது ஏற்றுக் கொள்ளத் தக்கதா?

சைவசித்தாந்தம் இதனை ஏற்குமா?

சிறிது அலசலாம்.

வேதத்தை மட்டும் ஏற்றுக் கொள்வோர் அவன் நான் ஆகிறேன் (சோகம் அஸ்தி) என்று பாவித்துத் தியானிப்பார்கள். அதனை சோகம் பாவனை என்பர்.

ஆனால், சிவாகம நெறியாளர்களான சைவ சித்தாந்திகளே சிவன் நான் (சிவோகம்) என்று பாவிப்பார்கள்.

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாக நிற்கும் என்பது சிந்தாந்தக் கோட்பாடு.

அவ்வாறாயின் ஆன்மாவும் சிவமும் ஒன்றா? பதியும் பசுவும் ஒன்றாகுமா?

எனில், இல்லை. அவை பொருட் தன்மையில் இரண்டாயினும். வேறு வேறு பொருள்களாகப் பிரித்தறிய இயலாத கலப்பினை உடையன.

இக்கலப்பும் அநாதியானது.

அவ்வாறாயின் அது ஏன் வெளிப்படையாகத் தெரியவில்லை? என்றால்,

ஆன்மாவிடம் உள்ள ஆணவாதி மலமறைப்பால் சிவத்தோடு தமக்குள்ள கலப்பை அறியாமல் அது மயங்குகிறது என்பர் சித்தாந்தாந்திகள்.

சிவமும் ஆன்மாவும் வேறு வேறு. ஆயின், எவ்வாறு ஆன்மா சிவமாகும்?

கேள்வி மீண்டும் தொடர்கிறது.

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் இயல்புடையது.

பாசத்தோடு பசு (ஆன்மா) சேரின் அது பாச பசுவாய் நிற்கும்.

அது போல, பாசம் நீங்கி பதி (சிவம்) உடன் சேரின் அது சிவமாகும்.

இதை, "தத்தரும தருமி"

என்று சர்வ ஞானோத்தர ஆகமம் பேசும். அதாவது, தத் - அது. (இங்கு அது என்பது ஆன்மா சேரும் பொருளான பாசம் அல்லது சிவம்)

தருமம் - குணம். (சாரும் பொருளின் குணம்)
தருமி - குணத்தையுடையது.

இதனால், ஆகமம் ஆன்மாவுக்கு ஆறுவகை நிலைகளைக் காட்டும்.

1. பூதாத்மா
2. அந்தராத்மா
3. தத்வாத்மா
4. ஜீவாத்மா
5. மந்த்ராத்மா
6. பரமாத்மா

இதில் ஆறாவது நிலையே சிவானுபூதி ஆகிய முக்தி ஆகும்.

ஆத்மாவின் முதல் ஐந்து நிலைகளும் செயற்கை. இறுதி நிலையே இயற்கை என்பர் அறிஞர்.

இங்கே, சிவமும் ஆன்மாவும் சமமாகுமா? என்ற கேள்வியான, சிவசமவாதம் உண்டாகிறது. எண்குணங்கள் சிவனுக்கன்றி ஆன்மாவுக்கு இல்லை.

ஆதலில் சமமாகாது எனத் தெளிவாகக் கூறுவர் சித்தாந்திகள்.

இதை உவமை வாயிலாக விளக்க இயலுமா?

எனின்

படிகத்தை உவமிப்பர்.

படிகத்தின் மீது ஒரு மாணிக்கத்தின் ஒளிபடின், படிகமானது மாணிக்கமாக மின்னும்.

ஆயினும், மாணிக்கத்தின் ஒளியை சிறிதளவு பற்றுமாயின் எஞ்சிய பகுதி வேறொன்றையே பற்றி நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோல, மலம் முழுமையாக நீங்க ஆன்மா சிவத்தையும் பாசத்தையும் மாறி மாறிப் பற்றி நிற்கும்.

அவ்வாறாயின், சிவோகம் பாவனையால் வரும் பயன் யாது? என்பது பெரிய கேள்வியாக முன் நிற்கும்.

இதற்கு மாந்திரீகர் செய்யும் கருட பாவனை உதாரண மாகக் காட்டுவர்.

சிவபெருமானின் வாகனம் ரிஷபம். இங்கே விஷ்ணுவின் வாகனமான கருடன் ஏன் குறிப்பிடப்படுகிறான்? எனில்,

இங்கே கருடன் பேசப்படுவது அப்பொருளில் அல்ல.

கருட மந்திரத்தை உருவேற்றி மாந்திரீகர் தம்மையே கருடனாக்கி மந்திர வடிவாய் நின்று விஷம் ஏறிய ஒருவனைப் பார்த்து அவனிடம் ஏறிய விஷமாகிய நஞ்சை இறக்கு வராம்.

அதுபோல,

ஆன்மா நான் சிவம் என்று நினைக்க, நினைக்க மல நீக்கம் ஏற்பட்டு சிவமாகும் என்பர்.

இதுவே சிவோகம் பாவனை என்பர்.

இந்த சிவோகம் பாவனையை சிவார்ச்சனை செய்வதன் முன் செய்து கொள்ள் விசேடம்.

அது சரி.

சிவோகம் பாவனையில் தலை சிறந்தவர் யார்?

எனில் ஸ்ரீ கிருஷ்ணனே தலை சிறந்தவன் என்பது சைவ சமயிகளின் நம்பிக்கை.

அந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் தன்னைச் சிவோகம் பாவனையில் நிலைநிறுத்தியே பகவத் கீதையை உபதேசித்த தாகக் குறிப்பிடுவார்.

இதனால், அர்ச்சுனன் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனையே சிவமாகப் பாவித்து சிவபூஜை செய்தான் என்றும் பின்னர் அவன் கைலையில் சென்று பார்த்தபோது, தன்னால் கிருஷ் ணன் மேல் இடப்பட்ட பூக்கள் சிவனார் மேலிருக்கக் கண் டான் என்றும் பல்வேறு கதைகளும் உள்ளன.

இவ்வாறெல்லாம் பேசப்படும் சிவோகம் பாவனையை அறிந்து – உணர்ந்து செய்வோரும், செய்விப்போரும் சிவ பெருமானுடைய கல்யாண குணங்களைப் பெற்று சிவ வாழ் வாகிய சுகவாழ்வைப் பெற்று நிறைவில் சிவப்பேறும் பெறுவர் என்பது சித்தாந்த உண்மையாகும்.

**கேள்வி– இன்றைய இலக்கிய உலகு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்–** வாசிப்புப்பழக்கம் குறைந்திருக்கிற இன்றைய சூழலில் மொழிப்புலமை மிகக்குறைவு. மொழிக்கையாளுகையில் பலரும் நிறைய பிழை விடுகிறார்கள். கல்விக்கூடங்களில் பட்டங்களைப் பெற்று வருபவர்கள் பலருக்கும் தமிழை சரியாகப் பயன்படுத்தத் தெரிய வில்லை. அதனை விட, பிறரைப் பாராட்டும் பண்பு குறைவு. பதவி மோகம் அதிகம். இந்த அளவில், இந்நாட்டு இலக்கிய உலகு திருப்தி தருவதாக இல்லை.

**கேள்வி– நீங்கள் எதில் திருப்தியடைகிறீர்கள்?**

**பதில்–** எனது சேவை முழுவதிலும் நான் துக்கத்தையும் அவமானத்தையும் சன்மானமாகப் பெற்றிருக்கிறேன். ஆனால், வகுப்பறையில் ஒரு நல்லாசிரியனாக இருந்தேன் என்பதையே பெருமையாக நினைக்கிறேன். இன்று வெளியில் பிரகாசிக்கிற பலரும் வகுப்பில் மாணவர்களுக்கு மிகவும் மோசமான ஆசிரியர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு இருந்து கொண்டு இவர்கள் தம்மை சாதனையாளர்களாகக் காட்டிக் கொள்வது மோசமானது. நான் அவ்வாறன்றி வகுப்பறையில் ஓரளவேனும் நல்லாசிரியனாக இருந்திருக்கிறேன்.

*– பதில் அளித்தவர் கலாநிதி. செல்லையா திருநாவுக்கரசு–*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்து சாதனம்

**(HINDU ORGAN)**


email : saivaparipalanasabai1888@gmail.com

ஹேவிளம்பி ஹு ஆவணி மாதம் மீ 1ஆம் உ (17.08.2017)

## இந்து சமய விழிப்புணர்வு பெருக வேண்டும்

நீண்ட கால உள்நாட்டு போராலும் அதன் பேறான இடப்பெயர்வு, உயிரழிவு, பொருட்சேதம் போன்ற பல்வகை இடர்களாலும் நம்மவர்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமன்று,

இன்று கூட சொந்த மண்ணில் குடியேற போராடுகிற வர்கள், கணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டடையப் பேராடு கிறவர்கள், வேலை தேடி போராடு பவர்கள் என்று நாளுக்கு நாள் எங்கு நோக்கிலும் போராட்டங்களே அதிகரித்து வருகின்றன.

ஆக, எங்கும் நிம்மதியற்ற நிலையே காணப்படு கிறது. வசதிகள் பெருகியும் வாழ்வு சிறக்கவில்லை. ஆகவே இதற்கு ஆன்மீக ரீதியாக எனினும் தீர்வு பெறப்பட வேண்டும்.

இந்த நிலையில் மத மாற்ற பிரச்சாரங்களும் எழுப்புதல் பேரில் நடக்கிறமனமாற்றங்களும் கூட அதிகரித்து வரு கின்றன. ஆகவே இந்துக்களான நாம் இதற்கு என்ன செய்கி றோம்.

கோயில்களும் கோபுரங்களும் கட்டுவதோடும் திருவிழாக்கள் செய்வதோடும் நம் பணி நிறைவு பெறலாமா?

எனவே நாம் இதற்கு மேலாக சமய – சமூகப் பணிகளை நிறைவாகச் செய்ய வேண்டும்.

ஆயினும் நம்முடைய பல்வேறு ஸ்தாபனங்களும் அற்புதமாக பிரச்சாரமின்றி பல்வகைப் பணிகளை ஆற்றி வருகின்றன. எளியோரை – ஏழைகளை – அநாதைகளை ஆதரவற்ற சிறுவர்களை – விதவைகளை முதியோரை காப்பாற்றுவதில் அவை பெரும் பணியாற்றி வருதல் கண்கூடு. அவற்றுக்கு நாம் கைகொடுத்து உதவ வேண்டும்.

இதை விட சமய உண்மைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பும் பணியும் நம்மிடம் உண்டு. அவ்வகையில் நம்மிடமுள்ள சமயப்பிரசாரகர்களின் தொகை மிகக் குறைவானது.

திருக்கோயிற் பெருக்கத்துக்கு அமையவும் மக்கள் தொகைக்கமையவும் சமயப் பிரசாரகர்களின் தொகையும் பெருக வேண்டும். சைவ சமய குருமார்களும் அவர்களோடு இணைந்து சிறப்புப் பயிற்சி பெற்ற பிரசாரங்களும் சைவ சமய உண்மைகளை பிரசாரம் செய்ய வேண்டும்.

இல்லாவிடின் வருங்காலத்தில் சமய அவநம்பிக்கை அதிகரிப்பதும் மக்களின் சமய நெறிப் பிறழ்வும் தவிர்க்க இயலாததாகி விடும். இந்நிலையில் இந்து சமய கலாச்சர திணைக்களம் சமயப் பிரசாரகர் பயிற்சி நெறி ஒன்றை ஆரம்பித்து ஒரு அணி அப்பயிற்சி நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளமை மிகவம் வரவேற்கத்தக்கது.

மேற்படி திணைக்களம் மட்டுமன்றி பிற பல நிலை யங்கள் மூலமும் இது நடைமுறைப்படுத்தப்படின் – அவ்வாறு நடைமுறைக்கு வருவது வெற்றி பெறின் இந்து தர்மம் செழிப்புறும்.

பிரகாரகர்கள் தம் வாழ்விலும் சமயத்தை பேணின் அவர்களின் வாக்கும் வாழ்வும் இணைந்து பிரகாசிக்கும். நல்லூர் உற்சவ காலத்தில் ஏற்பட்டுள்ள கந்தபுராண எழுச்சி மற்றும் ஆன்மீக விழிப்பு தொடர்ந்து மேம்பட நாமெல் லோரும் ஒன்று சேர்ந்து பயணிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சாதனம் –Hindu Organ பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

**வை. இரகுநாதமுதலியார்**

செயலாளர், சைவபரிபாலன சபை

நனி வாழ்க

செந்தமிழில் ஆங்கிலத்தில் சிறந்த இந்து சாதனங்கள்
தெய்வத் தன்மை
முந்து சைவம் வளர்ப்பதற்கே முழுப்பலத் தோ டெழுந்தவைகள்
முதல் வித்திட்டோர்
சிந்தை தனைச் சிந்தித்துத் தெய்யாண் டொரு கோடி
தேவர் போற்ற
வந்த இரு சாதனமும் வளஉந்தினிது வாழ்க நனி
வாழ்க மாதோ


பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள்
(இந்து சாதனம் 75 ஆவது ஆண்டு மலரிலிருந்து)

சர்வதாரி வருஷம் சித்திரை மாதம் 19 ஆம் திகதி (29.04.1888) ஞாயிற்றுக்கிழமை, வண்ணார் பண்ணையில் உள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியா சாலை மண்டபத்திலே சைவசமய பரிபாலன சபை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஐயா அவர்களின் நன் மாணாக்கர்களாலும் சைவ அபிமானிகளாலும் தோற்றுவிக்கப்பட்டது.

நீராவியடி சைவப்பிரபு திரு ஆறுமுகம்பிள்ளை நாவருடைய மாணவர் அவர் அச்சகம் ஒன்றை வாங்கி வண்ணார் பண்ணைச் சிவன் கோயில் வடக்கு வீதியில் சைவப்பிரகாச அச்சு யந்திரசாலை என்ற பெயரில் நடத்தினார்.

1884 ஆம் ஆண்டு திரு. ஆறுமுகம்பிள்ளை இப்பூவுலக வாழ்வை நீத்ததும் அச்சகம் மூடப்பட்டது. சைவ சமய பரிபாலன சபையின் முக்கிய ஸ்தாபகர்களில் ஒருவர் பிறக்ரர் காசிப்பிள்ளை. அவரே ஆறுமுகம்பிள்ளையின் குடும்ப பிறக் ரர். அவரது நன் முயற்சியால் சைவப்பிரகாச அச்சு யந்திர சாலை, சைவ சமய பரிபாலன சபையிடம் கையளிக்கப் பட்டது.

பின்னர் இந்த அச்சகம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தென் பாகத்தில் உள்ள கட்டடத்துக்கு மாற்றப்பட்டது. 1928 ஆம் ஆண்டு (23.11.1928) புதிய கட்டடத்துக்கு இடம்பெயர்ந்தது. (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குத் தெற்குப் பக்கத்தில்).



சைவப் பிரகாச அச்சு யந்திரசாலையின் விரோதி வருஷம் ஆவணி மாதம் 28 ஆம் திகதி (11.09.1889) புதன்கிழமை கிருஷ்ண பக்கத் துதியையும் உத்தரட்டாதி நாளும் கூடிய சுப தினத்தில் தமிழில் இந்து சாதனம் என்றும் ஆங்கிலத்தில் Hindu Organ என்றும் நாமம் இட்டுப் புறத்தே ஆங்கிலமும் அகத்தே தமிழும் கொண்ட பத்திரிகை, பட்சத்துக்கு ஒருமுறை (இரு கிழமைகட்கு ஒருமுறை) புதன்கிழமை டெமி அளவில் வெளியிடப்பட்டது.

Hindu Organ ஆங்கிலப் பத்திரிகைக்குத் பத்திராதிபராக திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஓய்வு பெற்ற பிரதம நீதிபதி திரு. தா. செல்லப்பாபிள்ளை அவர்களும் இந்து சாதனம் தமிழ்ப் பத்திரிகைக்கு திரு. த. கைலாசபிள்ளை அவர்களும் முதற் பத்திராதிபர்களாகக் கடமை ஆற்றினார்கள்.

பின்னர் இரு பத்திரிகைகளும் தனித்தனிப் பத்திரி கைகளாக வெளிவந்தன.

1906 ஆம் ஆண்டு முதல் இரு பிரசுரங்களும் அளவில் பெரிதாகி றோயல் பிரமாண அளவில் வெளிவந்தன.

1913 ஆம் ஆண்டு ஆடி மாதம் முதல் Hindu Organவாரம் இருமுறை திங்கட்கிழமை வியாழக்கிழமைகளிலும், இந்து சாதனம் வியாழக்கிழமை மாத்திரமும் வெளிவந்தன. இரு பத்திரிகைகளுமே குடாநாட்டின் செய்திப் பத்திரிகைகளா கவும், தமிழையும் சைவ சமயத்தையும் வளர்க்கும் பத்திரிகை களாகவும் விளங்கின. இக்கால ஆராய்ச்சியாளர்கள் பலர் அக்கால நிகழ்வுகளுக்கு இப்பத்திரிகைகளையே ஆதார மாகக் காண்பிக்கின்றனர்.

1915 ஆம் ஆண்டு Hindu Organ இந்து சாதனம் பத்திரி கைகளின் 25 ஆண்டுகள் சேவை நினைவாக விசேட மலர்கள் அச்சிடப் பெற்று வெள்ளிவிழாக் கொண்டாட்டம் நடை பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1923 ஆம் ஆண்டு ஆடி மாதம் முதல் இந்து சாதனப் பத்திரிகையும் வாரந்தோறும் இருமுறை திங்கட்கிழமை, வியாழக்கிழமைகளில் வெளிவந்தன.

1939 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் Hindu Organ இந்து சாதனம் பத்திரிகைகளின் 50 ஆண்டுகள் சேவையை முன்னிட்டு, தனித்தனியே விசேட "பொன்விழா" மலர்கள் அச்சிடப் பெற்று பொன்விழா கொண்டாடப்பட்டது. 1949 ஆம் ஆண்டு Hindu Organ இந்து சாதனம் பத்திரிகைகள் 60 ஆண்டுகள் சிறப்பாகப் பணி புரிந்தமையை முன்னிட்டு தனித்தனியே மலர்கள் வெளியிடப் பெற்று வைர விழா கொண்டாடப்பட்டது.

**Hindu Organ பத்திரிகையின் கௌரவப் பத்திராதிபர்கள்**

திரு. தா. செல்லப்பாபிள்ளை 1889 – 1891
திரு. அ. கதிரவேலு 1891 –
திரு. அ. சபாபதி 1891 – 1924
திரு. கு. இளையதம்பி 1924 – 1925
திரு. சபாரத்தினசிங்கி 1925 – 1927
திரு. கு. இராசரத்தினம் 1927 – 1931
திரு. கு. இளையதம்பி 1932 – 1936
திரு. V. நாகலிங்கம் 1936 – 1941
திரு. A.V. குலசிங்கம் 1941 – 1947
திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை 1947 – 1950
திரு. நம. சிவப்பிரகாசம் 1950 –

**இந்து சாதனம் பத்திரிகையின் கௌரவப் பத்திராதிபர்கள்**

திரு. தம்பு கைலாசபிள்ளை 1889 – 1896
திரு. க. கார்த்திகேசபிள்ளை 1896 – 1920
திரு. ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை 1920 – 1951
திரு. நம. சிவப்பிரகாசம் 1951 –
திரு. மு. மயில்வாகனம்

பின்னர் இரு பத்திரிகைகளும் (இந்து சாதனம் Hindu Organ) ஒரே பத்திரிகையாக வெளிவந்தன. அதன் ஆசிரியர்கள்.

திரு. நம. சிவப்பிரகாசம்
திரு. இராஜராஜேஸ்வரன் தங்கராசா
திரு. இ. குமாரவடிவேல்
திரு. சி. சிவசரவணபவன்

1967 ஆம் ஆண்டு இந்து சாதனம் Hindu Organ பத்திரிகைகளின் 75 ஆவது ஆண்டு சேவையை நினைவுபடுத்த 75 ஆம் ஆண்டு மலர் வெளியிடப்பட்டது.


தற்பொழுது சூழ்நிலை காரணமாக இந்து சாதனம் Hindu Organ பத்திரிகைகள் ஒரே பத்திரிகையாக வெளி வருகின்றன.

சிலகாலம் இப்பத்திரிகைகள் எதிர்பாராத காரணங்களால் வெளிவராது நின்று போயின. அது எங்களுக்கும் சைவ மக்களுக்கும் பெருங்கவலை. அண்மையில் 125 ஆவது வருட விழா கொண்டாடப்பட்டிருக்க வேண்டும். 2013 ஆம் ஆண்டு நின்று போன பத்திரிகைகள் மீண்டும் வெளிவருவது சைவ பரிபாலன சபை சைவ உலகுக்கு ஆற்றும் மிகச்சிறப்பான பணியாகும். சைவ மக்களின் பேராதரவால் தொடர்ந்தும் இந்து சாதனம் Hindu Organ (தமிழ், ஆங்கிலப் பதிப்புகள் வெளிவரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு

என்றும் இளையாய் என வாழ்த்துவோம்.

---

கண்ணப்பநாயனார் பிறப்பதற்கு முன்பு அவருடைய பெற்றோர் முருகனிடம் கீழ் வரும் சுலோகங்களைச் சொல்லி வேண்டியதாக வடமொழி பெரிய புராணம் (உபமன்யு பக்த விலாசம்) குறிப்பிடுகிறது.



நமோ நம: ஷண்முக - வல்லபாயை
நமோ நமோ நம்ர - ஜனார்த்தி - ஹந்த்ர்யை
நமோ நம : ஸர்வ - ஸம்ருத்திதாயை
நமோ நமஸ்தே திச வள்ளி புத்ரம்

ஆறுமுகனின் நாயகியே, பக்தர்களின் தீமைகளைப் போக்குபவளே எல்லா செல்வங்களையும் வழங்குபவளே வள்ளி தேவியே உனக்கு நமஸ்காரம். எனக்கு மகப்பேற்றை வழங்கு.

நமோ நம: சைல - ஸுதாத்மஜாய
நமோ நமோ பர்ஹிண - வாஹனாய
நமோ நமோ வள்ளீ - மனோஹராய
நமோ நமஸ்தே குஹ தேஹி புத்ரம்

மலைமகளின் மைந்தனே, மயிலை ஊர்தியாகக் கொண்டவனே, வள்ளியின் இதயம் கவர்ந்தவனே குஹனே உனக்கு நமஸ்காரம். எனக்கு மகப்பேற்றை வழங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமும் அதன் இருப்பிடமும்

## திருமதி இராஜினி தேவராஜன்

இருமுலை நடு மார்பு அடிவயிறு இதன்மேல்
இருமுப் பொருள்உள நிறம்பல இவற்றுள்
ஒரு பொருள் ஆம்பல் அரும்பென உள்ளே
இருவிரல் வலத்தே இருப்பதும் இதயம்

அதன்முகம் இகல் உளது அகமுய சிறுதுளை
அதனில் ஆசாதியொடு அமர்ந்துளது இருந்தமம்
அதன் ஆசிரித்து உள அகிலமா நாடிகள்
அதுவளி மனது ஒளி அவற்றினது இருப்பிடம்

(உள்ளது நாற்பது பாடல்கள் 18,19)

இரண்டு முலைகள், நடுமார்பு, அடிவயிறு
இவற்றுக்கு மேலே பல நிறங்கள் கொண்ட
ஆறுபொருள்கள் உள்ளன.

அவற்றுள்ளே அல்லிமொட்டுப்போல ஒரு பொருள் நடு மார்புக்கு வலப்புறம் இரண்டு விரல் தொலைசில் உள்ளது தான் இதயம். அது அல்ல மொட்டுப்போன்று (இதயத்தின் முகம்) குவிந்துள்ளது. அதன் உள்ளே இருக்கும் ஒரு சிறிய துளையில் ஆசை, கோபம் போன்றவற்றின அளவற்றி இருள் மண்டியுள்ளது. அதிலே அகிலத்தினன் எல்லாச் சூட்சும நாடிகளும் வந்து சேர்க்கின்றன. அந்த இதயமே பிராணன், மனம், அறிவின் ஒளி இவற்றின் இருப்பிடமும் ஆகும்.

இங்கே ஒரே இடத்தில் காமம் முதலியவற்றின் அடர்ந்த இருளும் அறிவின் ஒளியும் சேர்ந்து இருக்கின்றது. ஏன் ஒளியின் முன்னிலையில் இருள் விலகவில்லை? இது அறிவானது இருளாலே சூழப்பட்டிருக்கின்றது. இது சாதாரணமான மனித அறிவு, உடலையே நான்; என நினைத்திருக்கும் பொய்யறிவு எனவே இது உலகியலில் ஈடுபட்ட அறிவு. நான் ஒளி; என்பதை அறியாமல் இருளால் மூடப்பட்டிருக்கின்ற அறிவு.

நான் யார்? என்ற ஓர் எண்ணம் புறப்படும் போதும் இது எங்கிருக்கிருந்து புறப்படுகின்றது? என்று விசாரணை செய்கையிலும் ஆன்மீக இதயமாகிய உற்பத்தி ஸ்தானத்திற்கு மனம் செல்கிறது. இது தொடரும்போது, இருள் அற்றுப் போய் மெய்யறிவு துலங்குகின்றது.

ஆன்மிக இதயத்தின் இருப்பிடம் பற்றி இவ்வாறு பகவான் ரமண மகரிஷி உள்ளது நாற்பது; என்ற செய்யுள் நூலில் கூறியுள்ளார்.

தனு நிலை இலதாம்: தங்கிலும் எழினும்
வினையினால் அடுத்து வந்திருமெலும்
புனைதுகிலினைக் கள்வெறிக் குருடனைப் போல்
தனையுணர் சித்தன் தனு உணர்கிலனே.

ஒருவருக்கு சிந்திக்காமல் இருப்பது எவ்வளவு கஷ்டமோ ஒரு ஞானிக்குச் சிந்திப்பது அவ்வளவு கஷ்டம் ஆகும்.

மனம் இருந்தால்தான் சிந்தனை வரும் மனம் என்பது எண்ணங்களின் ஓட்டமே ஒரு வலியினை உணர்ந்து அதனால் வரும் விளைவினை அனுபவிப்பது மனமே. எனவே எண்ணங்கள் அற்ற சிந்திப்பதல்லாத ஒரு ஞானிக்கு வலியின் உணர்வின் விளைவு தெரியாது. ஒரு ஞானி மனம் அற்றவன்.

## ஜோதிடச் சிந்தனை

கடந்த சில நாட்களுக்கு முன் ராகு, கேதுப் பெயர்ச்சி இடம் பெற்றமையை அனைவரும் அறிவோம்.

வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம் இப்பெயர்ச்சிக்கான மிகச்சுருக்கமான கோசார பலன்கள் சிந்தனைக்காக,

**ஆறுதலடையப்போகும் ராசிகள் :** ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம்

**பரவாயில்லை :** மேஷம், துலாம்

**பாதிப்படையப்போகும் ராசிகள் :** மகரம், கடகம், கன்னி, மீனம்

**பரிகாரம் தேவைப்படும் ராசிகள் :** மிதுனம், தனுசு, மகரம், கடகம், கன்னி, மீனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் பக்கம்

# விநாயகர்



1. "விநாயகர்" என்ற சொல்லின் பொருள் தமக்குத் தலைவர் இல்லாதவர், ஒப்புயர்வற்றவர் என்பது பொருளாம், சிறந்த, நாயகர், தலைவர், நடத்துவோர் என்பதும் பொருளாம்.

2. விநாயகர் திருவுருவத்தின் அமைப்பு யானை முகம், ஒடிந்த கொம்பு, பருத்த தொந்தி, இடக்கையில் மோதகம், மூஷிக வாகனம் இவற்றுடன் இருந்த கோலத்தில் விளங்குவதே இத்திருவுருவத்தின் அமைப்பாம்.

3. இவர் பரமசிவன்றன் மூத்தகுமாரர் என்று கூறப்படுவானேன்?

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய கடவுளிடமிருந்து முதலாவது உண்டாகிய படைப்பு "ஓம்" எனும் பிரணவ நாதமேயாகும். அந்த ஓம் என்னும் ஒலியின் வரிவடிவமே விநாயகரின் திருவுருவமாம். இறைவனிடமிருந்து முதற்கண் தோன்றியது "ஓங்காரம் உருவன்" என்றும் பரமசிவனது மூத்தப்பிள்ளை என்றும் அழைக்கப்படுகிறார்.

4. ஓங்கார ஒலியின் வரிவடிவமே விநாயகர் என்பதை எவ்வாறு விளக்கலாம்?

ஒடிந்த கொழும்பு "ஓ" என்ற எழுத்தின் சுழி இருக்கு மிடம். இவ்வெழுத்து இங்கிருந்து தொடங்கி வலக்கை வழியாகக் கிரீடத்தைச் சுற்றி, இடக்கைப் பாசம் வரையில் வந்து திரும்பி வளைந்து, நெற்றிப் பொட்டு வரையிற் போய்த் துதிக்கை வழியாகக் கீழிடக்கை வந்து கால்வரை இறங்கும். இடக்கையும் மோதகமும் "ம்" என்பதைக் குறிக்கின்றன. ஆகையால் விநாயகர் திருவுருவம் ஓங்கார வடிவமேயாகும்.


5. இந்த விக்கிரகத்துக்கு யானை முகம் அமைக்கப்பட்டதேன்?

யானையின் குரலொலி உலகில் உண்டாகும் மற்ற எல்லா ஒலிகளைக் காட்டிலும் ஓங்காரப் பிரணவ ஒலியை நன்கு ஒலிப்பதால் யானைமுகம் இவருக்கு அமைக்கப்பட்டது.

6. எல்லா வழிபாடுகளிலும் விநாயகர் வழிபாடு முதலாவதாக செய்வது எதற்கு?

பிரணவ ஒலி எல்லாவற்றிற்கும் முதலாவதாக விளங்குவது: ஆகையால் விநாயகரும் முதலாவதாக வைத்துப் பூஜிக்கப்படுகிறார்.

# கஜாவல்லி – மகாவல்லி



அறிஞர் போல் தோன்றும் மூடர்
ஆயிரம் கேள்வி கேட்பார்
திருமாலின் விழிதரும் மாதர்
திறந்தினில் பேதம் இல்லை
ஒருவரில் இருவரானார்: இருவரும்
ஒருவரே தான் : இறைவர்க்கு
குறவரும் தேவர் கோமானும்
ஒன்றென்பதே உண்மையாமே

– குமாரகாவியம் – உபதேச காண்டம் – 2

வள்ளியம்மையும், தெய்வானையம்மையும் ஒரே திருவருவாக எழுந்தருயிருப்பதை நல்லூர் கந்தசுவாமி கோயில் உட்பிரகாரத்தில் ஓவிய வடிவிலும் திருவருவ வடிவிலும் காணலாம்.

இந்த வித்தியாசமான தேவி இவ்வாண்டும் ஆவணி 1 ஆம் நாள் அதிகாலையில் உற்சவம் காண்கிறாள். நாமும் இருவரும் ஒருவரே என உணர்ந்து போற்றுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திங்கள்தோறும் மலர பிரார்த்திக்கிறோம்

திரு. இ. வசந்தசேனன்

தலைவர் , சைவபரிபாலன சபை



1889 ஆம் ஆண்டு உதயமான இந்து சாதனம் – Hindu Organ இரு மொழி இதழ்கள் 128 ஆண்டுகள் பழைமை வாய்ந்தன.

தினசரிகள் உருவாகி – விநியோகம் சீர்பெறும் வரை இந்து சாதனமே மக்களின் வழிகாட்டியாக – காலத்தின் கண்ணாடியாகத் திகழ்ந்தது. எனினும், அண்மையில் சில ஆண்டுகள் சில இடர்பாடுகளால் இந்து சாதனப் பிரசுரம் மழுங்கடிக்கப்பட்டது.

ஆயினும், மீண்டும் சைவம் மீது கொண்ட ஆர்வத்தால் சபை உறுப்பினர்களின் முயற்சியாலும் இந்து சாதனம் மீண்டும் மலர்கிறது.

திங்கள்தோறும் இப்பத்திரிகை மலர ஆடவல்ல பெருமானின் திருவடிகளையும் சமயாச்சாரியர்களின் திருவடிகளையும் வணங்கி நிற்கிறோம்.

# நல்லையின் முதலே போற்றி

தென்புலோலியூர் பரா. ரமேஸ்

உலகெலாம் பரவும் சைவர்
உளமெலாம் நிறைந்து அன்பின்
தலமதாம் சந்தன் ஆட்சி
தகைமைசேர் பண்பின் காட்சி
இலமெனும் வறுமை எட்டா
எழில்தரு அருளின் மாட்சி
நலமுடன் நல்கும் எங்கள்
நல்லையின் முதலே போற்றி

அற்புதக் கோலம் கொண்டே
அருளுறு தகைமை கொண்டே
சிற்பரன் வடிவே என்ன
சிறப்புற ஆடல் செய்து
நற்பதப் பேறை சேர்க்கும்
நல்லையின் அரசே உந்தன்
பொற்பதம் பணிந்து நின்றோம்
பூண்டஜள் புரிவாய் போற்றி

வித்தகம் பேசி வாழ்வை
வீணடித் தலையா வண்ணம்
சித்தகம் தன்னை உந்தன்
நீரருள் திறந்துள்ள வைத்து
நித்தமும் கந்தா என்று
நிர்மலப் பொருளை மெச்சும்
பக்தர்கள் நாவில் நிற்கும்
பராபர குருவே போற்றி



நல்லையின் வீதி தன்னில்
நடப்பவர் வினைகள் எல்லாம்
ஒல்லையில் பறந்து ஓடி
உயர்நெறி சேரும் என்று
வல்லவர் சொன்னார் அந்த
வாக்கினை நாமும் பாட
தொல்லைகள் தீர்த்தே இன்ப
தூய்நெறி தடுவாய் போற்றி


பவமது பெருகி தர்மப்
பலமெனலாம் அருகு தென்றும்
தவமது பூண்ட முன்னோர்
தகைமைகள் குறையு தென்றும்
அவமதே உலகம் இன்று
அழுதிடும் பல்லோர் முன்னே
சுபமது இதுவே என்று
சொல்லிட அருள்வாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரருக்கு மங்களம்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



இராகம் : அசாவேரி தாளம் : ஆதி

**பல்லவி**

சிவகுரு நாதருக்குச் செயமங்களம் – நல்ல
செங்கமல பாதருக்குச் செய மங்களம்

**அனுபல்லவி**

பவமறுத் தெனையாளும் பன்னிரு தோளருக்கு
தவமுனி வர்களுளந் தங்கரு ளாளருக்குச்
(சிவ)

**சரணங்கள்**

கன்னிவள்ளி நேசர் பாவ நாசருக்கு மங்களம்
கதிர்காம வேலரீழ தேசருக்கு மங்களம்
மன்னுமடி யார்க்கருளு மாசில்கும ரேசருக்கு
துன்னிய அனந்தகோடி சூரியப்பிர காசருக்கு (சிவ)

மங்கையுமை பாலர்வடி வேலருக்கு மங்களம்
மன்னுமறை நூலரனு கூலருக்குச்
புங்கமிகு சிவகாம போதக சுசீலருக்குச்
செங்கையில் விளங்குவளைத் தெய்வயானை லோருக்குச்
(சிவ)

சங்கரன்குமா ரர்முகுல்லைத் தாரருக்கு மங்களம்
தன்னிகரில் லாதநல் லூரருக்கு மங்களம்
பொங்குசினத் தவுணரைப் போரில்வென்ற வீரருக்குத்
துவங்கவகத் தியற்கருள் தோமிலதி தீரருக்குச் (சிவ)

# 2016 – 2017 ஆம் ஆண்டு சைவபரிபாலன சபை உத்தியோகத்தர்களும் நிர்வாக சபையும்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. இ. வசந்தசேனன் |
| உபதலைவர் | : | திரு. ந. ஸ்ரீசக்திவேல் |
| | | திரு. க. தர்மகுலசிங்கம் |
| செயலாளர் | : | திரு. வை. இரகுநாதமுதலியார் |
| உபசெயலாளர் | : | செல்வி வினோதினி சண்முகலிங்கம் |
| பொருளாளர் | : | திரு. இ. குகதாசன் |
| பரீட்சைச் செயலாளர் | : | திரு. பொ. கமலநாதன் |
| உபபரீட்சைச் செயலாளர் | : | திரு. நா. வன்னியசிங்கம் |
| சமயப் பிரசார அமைச்சர் | : | திரு. V. தயாபரன் |
| உள்ளக கணக்காய்வாளர் | : | திரு. நா. இராசநாயகம் |
| கணக்காய்வாளர் | : | அரியரத்தினம் – கம்பனி |

### A பிரிவு நிர்வாக சபை உறுப்பினர்கள்

திரு. இ. வசந்தசேனன்
திரு. க. தஉமகுலசிங்கம்
திரு. V. தயாபரன்
திரு. நா. வன்னியசிங்கம்
திரு. த. கருணாகரன்
திரு. சே. செல்வராசா
திரு. இ. குகநாதன்
திரு. வ. பேரின்பநாயகம்

### B பிரிவு நிர்வாக சபை உறுப்பினர்கள்

திரு. த. பாலக்கிருஷ்ணன்
திரு. வரதராஜா
திரு. தி. மாணிக்கவாசகர்
திரு. . வித்தியாதரன்
திரு. ந. குலசிங்கம்
திரு. ங. ஸ்ரீசக்திவேல்
திருமதி நாச்சியார் செல்வநாயகம்
திரு. நா. இராஜநாயகம்

### C பிரிவு நிர்வாக சபை உறுப்பினர்கள்

திரு. இரா. செல்வவடிவேல்
திரு. கை. விசாகரத்தினம்
திரு. செ. ஜெயபாலசிங்கம்
திரு. மு. யோகராஜா
திரு. பொ. கமலநாதன்
திரு. சுதர்சனன்.
திரு. வை. இரகுநாதமுதலியார்
செல்வி வினோதினி சண்முகலிங்கம்

### D இந்து சாதனப் பத்திரிகை ஆசிரியர் குழுமம்

பிரம்மஸ்ரீ தி. மயூரகிரி சர்மா (பதிப்பாசிரியர்)
திரு. இ. வசந்தசேனன் (தலைவர்)
திரு. பொ. கமலநாதன் (பரீட்சை செயலாளர்)
திரு. வை. இரகுநாத முதலியார் (செயலாளர்)
திரு. இ குகதாஸன் (பொருளாளர்)
திரு. வி தயாபரன் (சமய பிரச்சார அமைச்சர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் சரிதமோதும் நற்றமிழ் மாலை

## கவிஞர் திரு. இராசையா குகதாசன்

(2013 ஆனிமாதம் இந்துசாதனம் 19ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருதர மிவர்க்கு ஆளாய் வருகைசெய் தெருவெ லாங்கை
சிரமிசை கூப்பி யன்பாற் சிந்திநின் றார்ப்ப வார்ப்ப
பெருமுளு மகிழ்வி னோடு புலவரு மறிஞர் மாரும்
இருபுற மிருந்தும் வாழ்த்த விவர்வரு மிடங்கள் தோறும்.

பூரண கும்பம் வைத்தார் பூசைகள் பாதஞ் செய்தார்
தோரண வாசல் நட்டார் துலங்கிடு மலங்க லிட்டார்
வாரண தந்த மாகு வாழைகள் பந்த ரிட்டார்
ஓரணி யாக நின்றே யுய்ந்தோம்நா முய்ந்தோ மென்றார்.

தாரணி சைவங் காத்த தலைவனே வாழ்க் வெங்கள்
மாரண மாற்றத் தோன்று மகிபனே வாழ்க வோங்கக்
காரண மாகு மெங்கள் கடவுளே வாழ்க கோமும்
நாரண வாதில் வென்ற நாவலா வாழ்க வென்றார்.

நீற்றொடு ருத்தி ராக்கம் நிறையணி பணிக ளோடு
வீற்றிருந் தடிய ரால்வர வேற்பளி பதிக ணீங்கி
போற்றிடு வார்கள் சூழப் பொலிசைவ நெறிக ளெல்லாம்
ஏற்றிடு சாலை வந்தே யெடுத்தனர் பெருவி ழாவை.

அதிமல ரிழைய நடுவ ணாக்குவா சனத்தி ருந்தே
முதியவ ரறிஞர் பாமரர் மழுவரும் விளங்கு மாறே
பதிபசு பாச திரிப தார்த்தலட் சணங்கள் கூறி
துதியொடு நிறைவு செய்தே தூமனர் மடத்துட் புக்கார்.

இவரிரு இல்லம் தேடி யிருகுரு மாரி னோடு
அவனியுள் வித்து வான்கள் அதிபிர முகர்களென்றே
புவனமெமத் திறத்து ளோரும் புண்ணிய சீலரான
தவமக ரவரை நாடித் தரிசிக்க வந்திருந்தார்.

(வளரும்....)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முன்னெடுத்த அனைத்துலகச் சைவ மாநாடு - 2017

இந்து நாகரிகத்துறை சார் ஆறு ஆளுமைகளும் சமஸ் திருதத்துறை சார் மூன்று ஆளுமைகளும் ஏனைய துறை களது ஆதரவுடன் 2017 ஆம் ஆண்டுக்குரிய சைவ மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியுள்ளனர்.

21.04.2017 அன்று தொட்டு மூன்று நாள்கள் நிகழ்ந்த இம் மாநாட்டில் 131 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. சென்ற ஆண்டின் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் நிகழ்ந்த இம் மாநாட்டில் ஈழத்தவரின் சித்தாந்தப் பணிகள் முன்னிலைப்ப டுத்தப்பட்டு விரிவாக ஆராயப்பட்டன. மட்டக்களப்பு அருணா சலதேசிகர், அச்சுவேலி குமாரசுவாமிக்குருக்கள், சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஏழாலைப் பண்டிதர் கந்தையா ஆகியோர் பேரில் அரங்குகள் அமைக்கப் பட்டிருந்தன.

இந்து நாகரிக துறைத் தலைவரின் அயராத முயறசியின் பேறாக இவ்வாண்டும் நிகழ்ந்த இம்மாநாட்டு ஆய்வரங் குகளில் கலந்து கொண்டோரின் தொகையும் நிறைவில் நடந்த விவாதங்களும் திருப்திகரமாக அமைந்தன.

கதிர்காமரைக் கல்லோடையிலிருந்து கதிர்காமத்துக்கு அழைத்துச் சென்றும், அங்கிருந்து கல்லோடைக்கு அவரைத் திருப்பி அழைத்துக் கொண்டு வந்து கந்தப்பெருமான், சந்தியில் எவ்வாறு பூசைகள் செய்யப்பட வேண்டும்



என்பதை விளக்கி யதுடன் நில்லமால் வேறும் பல சந்தர்ப்பங்களில் கோவிற் பூசைகள், நிர்வாகம் பற்றி அவருடன் உரையா டியதுண்டு. கோவிலில் நந்திக்குப் பின்னாற் காணப் படும் திண்ணையில் இருவரும் இருந்து உரையாடி னார்கள் என்ற நம்பிக்கை முருகனடியார்களிடம் இருக் கின்றது. அதனால் அந்தத் திண்ணையைப் புனிதமாகக் கருதி, அதற்குக் குறுக்காகவும் எந்த ஒரு சந்தர்ப்பத் திலும் எவருமே பொவதில்லை. வெளிவீதி உலாவுக் காகப் பிரதான வாசலால் சுவாமியைக் கொண்டு வந்தால், அந்தத் திண்ணைக்குக் குறுக்கால் போக வேண்டும், என்பதால் சுவாமியை, அருகிலேயுள்ள மணிக்கோபுர வாசல் வழியாகத் தான் வெளியே கொண்டு வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கந்தபுராண எழுச்சி விழா

இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத் தினால் முன்னெடுக்கப்படும் கந்தபுராண எழுச்சி விழா நல்லைக் கந்தன் ஆலய பெருவிழா நாட்களில் சிறப்புற நடைபெற்று வருகிறது.

### கந்தபுராண எழுச்சி

நல்லூர்ப் பெருமானின் வருடாந்த பெருந்திருவிழா ஆரம்ப காலத்தில் ஆறுமுக நாவலர் பெருமான் எழுதிய கந்தபுராண வசன நூல் நல்லூர் ஆலய முன்றலில் வெகு விமரிசையாக வெளியீடு செய்து வைக்கப்பட்டுள்ளது.

இச்சூழலில் நல்லூரானின் மஞ்ச திருவிழாவன்று எளிய இலகு நடையில் கவிதைகளாக கந்தபுராணத்தை எழுதி, "குமாரகாவியம்" என்ற பேரிலான புதிய ஒரு நூலும் வெளியாகியுள்ளது

### உலக சைவ இளைஞர் மாநாடு

அகில இலங்கை சைவ மகாசபை முன்னெடுத்த அகில உலக சைவ மாநாடு கடந்த 11ஆம் 12ஆம் திகதிகளில் எழுச்சி பூர்வமாக நடைபெற்றது. தமிழகத்திலிருந்து பேரூர் ஆதீனம் உள்ளிட்ட பேராளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### சண்முக தீர்த்த நூற்றாண்டு

1917 ஆம் ஆண்டு உருவான சிந்தனையின் அடிப்படையில் உருவெடுத்த நல்லூர் கந்தசுவாமி ஆலய சண்முக புஷ்கரணி திருக்குளம் இவ்வாண்டு நூற்றாண்டு காணுகிறது.

இந்த மரபை நினைவூட்டி புனரமைக்கப்பட்ட இத்திருக் குளம் ஆடிக் கிருத்திகை நாளில் புனருத்தாரண பிரதிஷ்டை செய்யப்பட்டது.


### சைவமாநாடு ஏற்பாடுகள்

சைவபரிபாலன சபை முன்னெடுக்கும் சைவமாநாடு எதிர்வரும் செப்டம்பர் மாத நடுப்பகுதியில் வெகு சிறப்பாக நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது இதனை சிறப்பாகவும் பயனுறுதியானதாகவும் நடாத்த சபை சைவ சமயிகளின் ஆதரவை நாடி நிற்கிறது.

### நல்லைக்குமரன் மலர் - 25

இவ்வாண்டு நல்லைக்குமரன் மலர் வெள்ளிமலராக வெளியிடப்பட்டுள்ளது.

### கலாநிதி. ஆறு. திருமுருகனுக்கு விருது



சைவப்பணிகளையும் சமூகப் பணிகளையும் செவ்வனே ஆற்றி வரும் தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய அறங் காலவலர் சபைத் தலைவரும் பிரபல சொற்பொழி வாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு திருமுருகன் அவர்களுக்கு ஆகஸ்ட் 15 ஆம் திகதி யாழ். விருது வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாநாகரசபையால் வழங்கப்படும் உயரிய விருதான இவ்விருது இம்முறை பெற்றுள்ள இவர் அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவரும் ஆவார். அவரது பணிகள் தொடர நாமும் வாழ்த்துகிறோம்.

## சைவபரிபாலன சபையில் சுந்தரர் குருபூசைப் பெருவிழா

பெரிய புராணத்தின் பாட்டுடைத் தலைவனாக போற் றப்பெறும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை ஆடிச் சுவாதித்திருநாள் சைவபரி பாலன சபையில் வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது.

30-07-2017 அன்று நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் யாழ். வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராசா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.



யாழ் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் நா. மகேந்திரராசா சிறப்பு விருந்தினராகவும் அதிபர் கௌரி பரந்தாமன் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

பெருமளவானோர் கலந்து கொண்ட இந்நிழ்வில் கலை நிகழ்வுகளும் மதுரகவி. காலை எம்பி. அருளானந்தன் பிரம்மஸ்ரீ. சாம். சோமாஸ்கந்தகுருஜீ, பண்டிதர் பொன். சுகந்தன் ஆகியோரின் சிறப்பு உரைகளும் நிகழ்ந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமாபதி சிவாசார்யார் – அருளிய
# கொடிக்கவி

# The Flag Hymn
## Of Saint Umapati Sivachcharyar

ஆங்கில ஆக்கம் : சேக்கிழார் அடிப்பொடி திரு. ந. இராமச்சந்திரன்

In English By : Sekkizhaar Adippodi T.N. Ramachandran

கொடிக்கவி நான்கு பாடல்களை மட்டுமே கொண்ட ஒரு ஆக்கம். இவ்வுலகத்தில் பதினாறு வரிகளில் எடுத்துச் சொல்லப்பட்ட சாஸ்திர நூல் யாதாயினும் உண்டோ? நாம் அவ்வாறு கருதவில்லை. கொடிக்கவி ஒரு தனித்துவமான ஆக்கம். இப்பதினாறு வரிகளையும் விளங்கி உணரக்கூடிய ஒருவரை ஒரு உண்மை சைவசித்தாந்தியாகப் போற்றலாம். அவர் எங்கு சென்றாலும், அவர் தமது வெற்றிக் கொடி உயரப் பறப்பதைக் காண்பார்.

1. ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேஇடம் – ஒன்று
   மேலிடி லொன்(று)
   ஒளிக்கும் எனினும் இருளடராதுள் ளுயிர்க்கு யிராய்த்
   தெளிக்கும் அறிவு திகழ்ந்துளதேனும் திரிமலத்தே
   குளிக்கும் உயிரருள் கூடும் படிக்கொடி கட்டினனே.

2. பொருளாம் பொருளேது போதேது கண்ணே(து)
   இருளாம் வெளியே(து) இரவே (து) –அருளாளா
   நீபுரவா வையமெலாம் நீ அறியக் கட்டினேன்
   கோபுர வாசற் கொடி.

3. வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
   தாக்கா(து) உணர்வரிய தன்மையனை –நோக்கிப்
   பிரித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
   குறிக்கும் அருள் நல்கக் கொடி.

4. அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும்
   நாலெழுத்தும்
   பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் நெஞ்சழுத்திப்
   பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
   கூசாமற் காட்டக் கொடி.

| | | |
|---|---|---|
| அஞ்செழுத்து | : | சி, வ, ய, ந, ம |
| எட்டெழுத்து | : | ஓம், ஆம், ஔம், சி, வ, ய, ந, ம |
| ஆறெழுத்து | : | ஓம், ந, ம, சி, வா, ய |
| நாலெழுத்து | : | ஓம், சி, வா, ய |
| பிஞ்செழுத்து | : | வ |
| பெரு எழுத்து | : | சி |
| பேசும் எழுத்து | : | வ |
| பேசா எழுத்து | : | சி |

Kodikkavi is a work cantaining four stanzas only. Is there in the whole world a sasthra which is barely sixteen imes only We think not Kodikkavi is a unique work. The person who can comprehend these sixteen lines can be hailed as a true Saiva Siddhanthi. Wherever he goes, he will find his flag of triumph flying aloft.

1. Self - same is the place for light and darkness;
   If one dominates, the other lies perdu;
   Yet darkness o'er light never doth hold sway:
   Albeit knowledge that lies in the core
   Of inner life embedded, gins to shine
   'Tis nathless in triple mala immersed;
   Let me therofore help life to attain Grace
   And for this, let me the flag hoist aloft.
2. What indeed's That which is everlating?
   What, indeed is the Bloom? What are indeed O most Benevolent! the Eye, th' Expanse Of Darkness and the Night? Thou dost uphold . All the words: behold this! At the threshold Of thine Tower, I Hoist the Flag aloft
3. Behold, His Nature is beyond the ken Of comprehension: He is for ever Above the reach of word or mighty mind: Mystic scrutiny reveals He is Ineluctably linked with the soul always; To come by Grace, reclined in that union, The hallowed Flag is hoist aloft by me.
4. The pentad, th' octad, th' hexad and the quartet Of Letters , as well as th' tender letter And the great letter that precedent it When in th' heart are imprinted th' speaking letter will fully reveal the Silent letter; For this is the Flag hoist aloft by me.

| | | |
|---|---|---|
| The Pentad | : | Si, Va, Ya, Na, Ma |
| The Octad | : | om, Aam, Auv, Si, Va, Ya, Na, Ma , om, ham, haum) |
| The Hexad | : | Om, Na, Ma, Si, Vaa, Ya |
| The Quaetet | : | Om, Si, Vaa, Ya |
| The fender letter | : | Va |
| The Great letter | : | Si |
| The Speaking Letter | : | Va |
| The Silent Letter | : | Si |

Edited & Published by Mr. T.Mayoorakiri on behalf of the Saiva Paripalana Sabai - 1st Day of Avanithingal
No: 450, K.K.S. Road, Jaffna & Printed at Guru Printers. No:39/2, Adiyapatham Road, Thirunelvely. 17-08-2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org